6.3.35 L. ஸ்ரீநிவாஸன்.

அசல் – 1 நகல் – இல்லை

Replied 2
17.3.35

Kalpathi
Palghat.
6.2.35 3

ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள்
ஸந்நிதிக்கு :—

அநேக நமஸ்காரபூர்வமாக விஜ்ஞாபனம்.

இத்துடன் இணைத்திருக்கும் காகிதத் தமிழ்மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தின் தீர்மானத்தைத் தேவரீர்களுக்கு அனுப்பி வைக்கும்படி சங்கத் தலைவர்கள் நியமித்தபடி அனுப்பியிருக்கிறேன்.

தேவரீர்களுடைய திருமேனியாரோக்கியத்துக்கும் மற்றும் விசேஷங்களுக்கும் நியமித்து தெரியப் ப்ரார்த்திக்கின்றேன். ஸ்ரீமத் கல்யாணஸுந்தரம் ஐயரவர்களுக்கு என் நமஸ்காரங்களைச் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன். மறுதபாலில் விஜ்ஞாபனம் செய்து கொள்வேன்.

இங்ஙனம்,
அநேக நமஸ்காரம்,
தங்கள்,
L. ஸ்ரீநிவாஸன்.

அசல்

6.3.35 L. பாரதிதாசன்.

அசல் - 1 நகல் - இல்லை

6 3 35 3

[illegible]

(11)

அசல்

உ

பாலக்காடு அரசாங்க விக்டோரியா கலாசாலைத்

தமிழ் மாணவர் சங்கம்

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி, டாக்டர் பிரம்மஸ்ரீ ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரவர்களின் 80-வது ஆண்டு நிறைவு விழாவின் சார்பாக, இன்று இக்கலாசாலைத் தமிழ் மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று மகாராஜஸ்ரீ R. திரிமூர்த்தி ராவ் அவர்களின் தலைமையின் கீழ் நடை பெற்றது.

அதில் மஹாமஹோபாத்யாய. டாக்டர் ஐயரவர்கள் நம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, உழைத்துவரும் அரும்பெருஞ் செயல்களைப் பலர் புகழ்ந்து பாராட்டியதோடு, அப்பெரியார், இன்னும் பல ஆண்டுகள் அரோக திடகாத்திரராய் எழுந்தருளியிருந்து மென்மேலும் புகழுடன் விளங்க நம் தாய் மொழியை வளர்த்து வருமாறு திருவருள் சுரக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாக எல்லோராலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

Palghat
6-3-35

இங்ஙனம்

L. Srinivasa Ayyar.
Tamil Pandit
Govt. Victoria College
Palghat

அசல்

[illegible] 12

F-177-178

page. 559 to 561.

(12) F-177-178-179